செ.வெ.எண்.69 நாள் : 13.06.2024

# செய்தி வெளியீடு

**சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பினை சீரமைத்தல் தொடர்பாக, சென்னை மாவட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்கள் வாரியாக தயாரிக்கப்பட்ட வரைவு வழிகாட்டி பதிவேடு பொதுமக்கள் பார்வையிடும் வகையில் வட்டாட்சியர், சார்பதிவாளர் அலுவலகங்கள் உட்பட முக்கிய அரசு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளது என சென்னை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) திருமதி அ.அனுசுயாதேவி அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பினை சீரமைத்தல் தொடர்பாக இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47AA–ன் கீழான தமிழ்நாடு முத்திரை (சொத்துகளுக்கான சந்தை மதிப்பு வழிகாட்டி தயாரிக்க மதிப்பீடு செய்தல், வெளியிடுதல் மற்றும் திருத்தியமைத்தலுக்காக மதிப்பீட்டு குழு ஏற்படுத்துதல்) விதிகள் 2010, விதிகளில் விதி 4(2)–ன் படி மைய மதிப்பீட்டு குழு 26.04.2024–ல் நிர்ணயம் செய்த நெறிமுறை கோட்பாட்டிற்கு இணங்க சென்னை மாவட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்கள் வாரியாக வரைவு வழிகாட்டி பதிவேடு தயாரிக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வையிடும் வகையில் வட்டாட்சியர், சார்பதிவாளர் அலுவலகங்கள் உட்பட முக்கிய அரசு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் விவரங்கள் www.tnreginet.gov.in என இணையதள முகவரியில் அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மீது ஏதேனும் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துரைகள் இருப்பின் அதனை 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மதிப்பீட்டு துணைக்குழுவிடம் கீழ்கண்ட முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளித்திட பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். என சென்னை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) திருமதி அ.அனுசுயாதேவி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**முகவரி;**
மதிப்பீட்டு துணைக்குழு,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிங்காரவேலர் மாளிகை,
சென்னை மாவட்டம்-01.

*************

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சென்னை–01.**